மெட்ரோ ரயில் நிலையங்களில் நடத்தப்படும்

# பாரம்பரிய விளையாட்டுகளுக்கு பொதுமக்களிடையே வரவேற்பு

■ சென்னை

மெட்ரோ ரயில் நிலையங்களில் நடத்தப்படும் பாரம்பரிய விளையாட்டுகளுக்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. செல்போனில் மூழ்கியிருக்கும் குழந்தைகளுக்கும், மாணவர்களுக்கும் நல்ல மாற்றாக பாரம்பரிய விளையாட்டுகள் இருப்பதாக பெற்றோர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறும்போது, "கணினி, செல்போன் போன்ற தொழில்நுட்பங்களின் பயன்பாடு அதிகரித்து விட்டதால், பாரம்பரிய விளையாட்டுகளை படிப்படியாக மறந்துவிடுகிறோம். இந்நிலையில், மெட்ரோ ரயில் நிலையங்களில் பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சிகளை கடந்த 16-ம் தேதி தொடங்கினோம்.

பல்லாங்குழி, பரமபதம், ஆடுபுலி ஆட்டம், கட்டம் விளையாட்டு, நாலுகட்ட தாயம், தடி ஆட்டம் உட்பட பல்வேறு விளையாட்டு போட்டிகளில் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரையில் ஆர்வமாக பங்கேற்று வருகின்றனர். தினமும் சராசரியாக 60 முதல் 80 பேர் வரையில் இதில் பங்கேற்கின்றனர். வரும் ஆகஸ்ட் 13-ம் தேதி வரையில் இந்த விளையாட்டுகள் நடக்கும்" என்றனர்.

**மகிழ்ச்சியாக இருக்கிறது**

இதுபற்றி பொதுமக்கள் சிலர் கூறும்போது, "நாங்கள் குழந்தைகளாக இருந்தபோது, விளையாடிய விளையாட்டுகளை மெட்ரோ ரயில் நிலையங்களில் குழந்தைகளோடு விளையாடுவது மகிழ்ச்சியாக இருக்கிறது. பள்ளி, கல்லூரி மாணவர்கள் வீடு வந்தவுடன் செல்போனிலேயே மூழ்கி விடுகிறார்கள். இதனால், நம்முடைய பாரம்பரிய விளையாட்டுகள் பற்றி அதிகளவில் தெரிந்திருக்க வாய்ப்பு இல்லை.

இந்நிலையில் மெட்ரோ ரயில் நிலையங்களில் நடக்கும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்ச்சி மூலம் நம் பாரம்பரிய விளையாட்டுகளைப் பற்றி குழந்தைகளுக்கு எடுத்துச்சொல்ல முடிகிறது" என்றார்.